- பாதிக்கப்பட்டவர் தனது விருப்பப்படி ஒரு வழக்கறிஞரை தேர்வு செய்யலாம். இதற்க்கான செலவுத்தொகையை அரசு செலுத்தும்.
- முதல் தகவல் அறிக்கை, குற்றப்பத்திரிக்கையின் நகலை கட்டணமின்றி பெறும் உரிமை.

**பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு உரிமைகள்**

- பாதிக்கப்பட்டவர், சாட்சிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு குறைந்தபட்சம் தீர்ப்பு வழங்கப்படும் வரை பாதுகாப்பு வழங்க வேண்டும்.
- பாதிக்கப்பட்டவர்கள், அவர்களை சார்ந்து இருப்பவர்கள், சாட்சிகள் ஆகியோருக்கு எதிரான எந்த வகையான அச்சுறுத்துதல், கட்டாயப் படுத்துதல், தூண்டுதல் அல்லது வன்முறை மற்றும் மிரட்டல் இவற்றில் இருந்து பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளை செய்து கொள்வதற்கான உரிமை.
- வயது, தோற்றம், பாலினம் மற்றும் கல்வி போன்றவைகளால் பாதிக்கப்பட்டோரை கண்ணிய குறைவாக நடத்தக்கூடாது. மாண்புடனும், மரியாதையுடனும் நடத்தப்பட வேண்டும்.
- பாதிக்கப்பட்டோர், அவருடைய உறவினர், சாட்சி மற்றும் தகவல்தாரரின் பெயர் மற்றும் முகவரி போன்ற தனிப்பட்ட விவரங்கள் பாதுகாப்புக்காக வெளியிடப்படாமல் மறைத்து வைக்கலாம். இதன் மூலம் அவர்களின் தனியுரிமை பாதுகாக்கப்படும் மற்றும் அவர்களுக்கு பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.
- அச்சுறுத்தல் அல்லது வன்முறைக்கு உட்பட்டதாக புகார் அளித்தால், அதை பதிவு செய்தல் மற்றும் முதல் தகவல் அறிக்கையின் நகலை உடனடியாக வழங்குவது அதிகாரியின் கடமையாகும். பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பும், உடனடி நிவாரணம், அடிப்படை வசதிகள் மற்றும் தேவையான சேவைகளும் வழங்கப்பட வேண்டும்.

**தண்டனை**

குற்றம் நிரூபிக்கப்பட்டால் குற்றத்தின் தன்மை மற்றும் சட்டத்தின் விதிகளின் அடிப்படையில் குற்றவாளி தண்டிக்கப்படுவார். மறுபுறம், குற்றம் நிருபிக்கப்படாவிட்டால், குற்றம் சாட்டப்பட்டவர் விடுவிக்கப்படுவார்.

**இச்சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்டவருக்கு கிடைக்க வேண்டிய நிவாரணங்கள்**

- **நிவாரணம்:** பாதிக்கப்பட்டவர் மற்றும் குடும்பத்தினருக்கு காவல்துறையினரால் உடனடி பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.
- **நிவாரணத் தொகை:** குற்றத்தின் தன்மை மற்றும் தீவிரத்தைப் பொருத்து ₹1.00 லட்சம் முதல் ₹12.00 லட்சம் வரை நிவாரணம் அளிக்கப்படுகிறது. இத்தொகை 3 கட்டங்களாக (FIR, குற்றப்பத்திரிக்கை தாக்கல், தீர்ப்பு) வழங்கப்படுகிறது.
- **TADA:** பாதிக்கப்பட்டவர் விசாரணை, நீதிமன்ற விசாரணை மற்றும் வழக்கு நடைபெறும் இடத்திற்கு அவர்கள் தங்குமிடத்திலிருடந்தது வந்து போகும் பயணபடி, தினக்கூலி மற்றும் பராமரிப்பு செலவுகள் வழங்கைப்பட வேண்டும்.

**சமூகப் பொருளாதார மறுவாழ்வு**

கொடூரக் குற்றங்களால் (கொலை, பாலியல் பலாத்காரம், தீவைப்பு, நிரந்தர உடல் ஊனம்) பாதிக்கப்பட்டவர்களுக்கு சமூகப் பொருளாதார மறுவாழ்வு பெரும் உரிமை உண்டு.

- வீடு / விவசாய நிலம் / அரசு வேலை,
- பாத்திக்கப்பட்ட குடும்பத்தினருக்கு யாரேனும் ஒருத்தருக்கு மாதந்தோறும் உதவி தொகை (Pension).
- குழந்தைகளுக்கு உண்டு, உறைவிட கல்வி.

**மேலும் விரிவான தகவல்களை அறிந்துகொள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்**

அவசர உதவி எண்கள்

**அரசு உதவி எண்: 14566**

**சிறகுகள் உதவி எண்:** ____________

**சிறகுகள்**

## தனித்து வாழும் பெண்கள் செயல்பாட்டுக் கூட்டமைப்பு (SWAN)



# பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம், 1989

**மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு**

M: +91 8660891451 | E: swan@hrf.net.in | W: hrf.net.in

**சட்டத்தின் நோக்கம்**

பட்டியல் சாதியினர் (SC) மற்றும் பட்டியல் பழங்குடியினர் (ST) மீது நடைபெறும் வன்முறை, அவமதிப்பு, பழிவாங்கும் செயல்களை முன்கூட்டியே கண்டறிந்து தடுப்பது மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு, நீதிமுறைகள், நிவாரணம் வழங்குவது.

**வன்கொடுமை தடுப்பு சட்டம் என்றால் என்ன?**

ஒரு குற்றம் 'வன்கொடுமையாக' கருத (சாதி அடிப்படையிலான வெறுப்பினால் ஏற்படுத்தப்பட்ட குற்றம்) கீழ் கண்ட மூன்று நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

1. குற்றவாளி பட்டியல் சாதியைச் சாராதவராக இருக்க வேண்டும்.
2. பாதிக்கபட்டவர் பட்டியல் சமூகத்தைச் சார்ந்தவராக (SC, ST) இருக்க வேண்டும்.
3. அக்குற்றம் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் பிரிவு 3ல் வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும்.

**புகார் செய்தல்**

வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர் அல்லது அவரை சார்ந்தவர்கள் அல்லது சாட்சிகள் அல்லது உதவும் நபர்கள் அல்லது எவர் ஒருவராலும் ஒரு காவல் அதிகாரி அல்லது பிற அதிகாரியிடம் ஒரு குற்றம் நடந்ததாக தகவல் கொடுப்பது. இந்த தகவல் வாய்மொழியாகவோ அல்லது எழுத்து பூர்வமாகவோ அளிக்கப்படலாம். புகார் கொடுப்பதற்கு சாட்சி தேவையில்லை.

**இந்த சட்டத்தின் கீழ் அதிகாரிகளின் பொறுப்புகள்**

**மாவட்ட அளவில்**

***மாவட்ட ஆட்சியர்***

- 24 மணி நேரத்தில் கள ஆய்வு, சேத மதிப்பீடு செய்தல்.
- உணவு, குடிநீர், வீடு, மருத்துவம், போக்குவரத்து ஏற்பாடு செய்தல்.
- 7 நாட்களில் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்குதல்.
- விழிப்புணர்வு முகாம்கள், பயிற்சிகள் நடத்துதல்.
- தேவையான முன்னெச்சரிக்கை, தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது.

**மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (SP)**

- 24 மணி நேரத்தில் கள ஆய்வு, செய்து உயிருக்கும் உடைமைக்குமான சேதாரத்தை மதிப்பிடுதல்,
- நிவாரணத்தைக் கணக்கெடுத்து நீதிமன்றத்திற்கு அறிக்கையின் நகலை அனுப்புவது.
- உடனடியாக FIR பதிவு செய்தல், குற்றவாளி கைது செய்ய தேவையான நடவடிக்கைகளையும் உறுதி செய்ய வேண்டும்.

**துணை காவல் கண்காணிப்பாளர் (DSP)**

- 24 மணி நேரத்தில் கள ஆய்வு செய்தல், புகாரை பதிவு செய்து நகலை இலவசமாக வழங்குதல்.
- 60 நாட்களில் புலனாய்வு முடித்து குற்றப்பத்திரிக்கைத் தாக்கல் செய்தல்.

**சிறப்பு/ தனிச்சிறப்பு அரசு வழக்கறிஞர்**

சிறப்பு நீதிமன்றத்களில் வழக்குகளை நடத்த வேண்டும்.

**சிறப்பு நீதிமன்ற நீதிபதி**

- மாவட்ட ஆட்சியர் சமர்ப்பித்த நிவாரணம் மற்றும் மறுவாழ்விற்கான அறிக்கையை ஆராய்வதோடு பாதிக்கப்பட்டோர் / சார்ந்தோருக்கு உரிய நேரத்தில் கிடைக்கப்பெறாத போதுமான இழப்பீடு / அல்லது வேறு உதவிகளை வழங்க ஆணையிடலாம்.
- குற்றப்பத்திரிக்கைத் தாக்கல் செய்த நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள்ளாக வழக்கு விசாரித்து முடித்து வைக்க வேண்டும்.
- பாதிக்கப்பட்டோர் / சார்ந்தோர் / சாட்சிகள் / தகவல் தெரிவிப்போரின் பாதுகாப்பிற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.
- பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும்வரை முழுமையான பாதுகாப்பு வழங்குதலை உறுதிப்படுத்துதல்.

**மாநில அளவில்**

***நோடல் அதிகாரி***

விதி 9(4) கீழ் வன்கொடுமையினால் பாதிக்கப்பட்டவர்கள்/ அவர்களைச் சார்ந்தவர்களுக்கு பணமாகவோ பொருளாகவோ அல்லது இரண்டுமே நிவாரணமாக வழங்க மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளை ஆய்வு செய்தல்.

**குற்ற வழக்கு தொடர்புத் துறை இயக்குநரின் பணி**

ஒவ்வொரு காலாண்டின் கடைசியிலும் விசாரணை அதிகாரியால் நடத்தப்படும் விசாரணைகளின் நிலையை மதிப்பாய்வு செய்தல்.

**இச்சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்டவரின் உரிமைகள்**

***வழக்கு தொடர்பான தகவலை பெரும் உரிமை***

- பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம், மறுவாழ்வு உதவி உள்ளிட்ட சேவைகள் வழங்கப்பட வேண்டும். அவர்களுக்கு விசாரணை, நீதிமன்ற நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் முன்கூட்டியே மற்றும் நேரத்துக்கு ஏற்ப தெரிவிக்கப்பட வேண்டும்.
- நீதிமன்ற நடவடிக்கைகளில், பாதிக்கப்பட்டவருக்கும் வாதங்களில் பங்கேற்கும் உரிமை உண்டு. அத்துடன், தேவையான நிலையில் எழுத்துப்பூர்வமாக கோரிக்கைகள் தாக்கல் செய்யும் உரிமையும் வழங்கப்படுகிறது.
- வழக்கை விசாரிக்கும் நீதிமன்றம், பாதிக்கப்பட்டவர் மற்றும் சாட்சிகளுக்கு பாதுகாப்பும், வழக்கு செலவுகள், போக்குவரத்து, தினக்கூலி உள்ளிட்ட அனைத்து ஆதரவுகளும் வழங்க வேண்டியது கட்டாயம். மேலும், அவர்களின் சமூக மற்றும் பொருளாதார மறுவாழ்விற்கான நிவாரணமும் உறுதி செய்யப்பட வேண்டும்.
- தன்னார்வ அமைப்புக்கள், சமூக செயல்பாட்டாளர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் ஆகியோரிடமிருந்து தங்களுக்கு தேவையான பாதுகாப்பு, ஆற்றுப்படுத்துதல், ஆலோசனைகள், வழிகாட்டுதல்கள் ஆகியவற்றை பெறுவது பாதிக்கப்பட்டவரின் உரிமை.